# NTU பட்டதாரிகளில் பலருக்கு விரைவில் வேலை கிடைத்தது

வாசிப்புநேரம் - 1 நிமிடம்




Lim Li Ting/TODAY
வெளியீடு : 22 Feb 2024 04:14PM

நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் (NTU) சென்ற ஆண்டு பட்டம் பெற்றவர்களில் பெரும்பாலோர் குறுகிய காலத்தில் வேலையில் சேர்ந்துள்ளனர்.

இறுதித் தேர்வு எழுதி முடித்த 6 மாதத்துக்குள் பத்தில் ஒன்பது பேருக்கு வேலை கிடைத்துள்ளது.

நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகமும், மற்ற தன்னாட்சிப் பல்கலைக்கழகங்களும் இணைந்து நடத்திய கருத்தாய்வில் அது தெரியவந்துள்ளது.

நன்யாங் பல்கலைக்கழகப் பட்டதாரிகள் சுமார் 4,500 பேர் அதில் கலந்துகொண்டனர்.

முழுநேர வேலையில் சேர்ந்த புதிய பட்டதாரிகளின் மாதச் சம்பளம் 4,511 வெள்ளி.

*ஆதாரம் : CNA*